அந்தப் புதிய கட்டடத்தை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

239—

மின்னாக்கி வசதி

***14392—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் அரசு பொது மருத்துவமனையில் மின்னாக்கி வசதி செய்து, தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் அரசு பொது மருத்துவமனையில் தற்போது 4 ஜெனரேட்டர்கள் செயல்பாட்டில் உள்ளன. இவை மருத்துவமனையின் தற்போதைய அவசர மின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளன. ராஜபாளையம் அரசு மருத்துவமனை பல்வேறு வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. வட்ட மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தலாம். ஆனால் விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகர் மாவட்ட தலைமை மருத்துவமனை செயல்பாட்டில் உள்ளதால் ராஜபாளையம் வட்ட மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.*

திரு. க. கோபால்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரும்பைவிட வலிமையானது நெருப்பு, நெருப்பைவிட வலிமையானது நீர், நீரைவிட வலிமையானது காற்று, அந்தக் காற்றைவிட வலிமையானது மலை, அந்த மலையைப் போன்று திடமான, தீர்க்கமான முடிவுகளை உறுதியோடு எடுக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய பாரதப் பிரதமர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, ராஜபாளையம் அரசு பொது மருத்துவமனைக்கு மின்னாக்கி வசதியை உடனடியாக வழங்கியமைக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

ராஜபாளையம் அரசு மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலை 208—ல் அமைந்துள்ளது. இந்தச் சாலையிலே முக்கிய சுற்றுலாத் தலங்களான, குற்றாலம், பிரசித்திபெற்ற ஐயப்பன் கோயில் போன்ற ஸ்தலங்கள் இருக்கின்றன. போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள இச்சாலையில் விபத்து ஏதாவது ஏற்பட்டால், சிவகிரி, கடையநல்லூர், புளியங்குடி போன்ற பகுதிகளிலிருந்து ராஜபாளையம் அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்து வருகிறார்கள். இங்கு நவீன தலைக்காய சிகிச்சைப் பிரிவு இல்லாததால், மதுரை அரசு இராஜாஜி பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவேண்டியுள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ராஜபாளையம் அரசு பொது மருத்துவமனையில் நவீன தலைக்காய சிகிச்சைப் பிரிவு துவங்க ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் வட்ட மருத்துவமனை இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் 164 படுக்கைகள் உள்ளன. மேலும் இம்மருத்துவமனையில் தினசரி சராசரியாக 700—லிருந்து 800 வெளிநோயாளிகளும், 115—லிருந்து 120 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

2013 ஏப்ரல் 16]

இம்மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கென தனித்தனியே உள் நோயாளிகள் பிரிவு, தொற்று நோய் சிகிச்சைப் பிரிவு, அறுவை சிகிச்சை அரங்கு, இரத்த வங்கி, ஆய்வகம், ஈ.சி.ஜி., ஸ்கேன், எக்ஸ்–ரே போன்ற வசதிகள் உள்ளன. இதுதவிர CEMONC என்று சொல்லக்கூடிய 24 மணி நேரம் செயல்படும் தாய் சேய் நல சிகிச்சைப் பிரிவும் NICU என்று சொல்லக்கூடிய பச்சிளங்குழந்தைகள் பராமரிப்பு தீவிர சிகிச்சைப் பிரிவும் செயல்பட்டு வருகின்றன.

மேலும், ராஜபாளையத்தில் உள்ள அந்த மருத்துவனை நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிற காரணத்தினால் அந்த மருத்துவமனைக்கு தலைக்காய சிகிச்சைப் பிரிவு அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார். ஆனால் தலைக்காயப் பிரிவினைப் பொறுத்தவரையிலே அது மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மருத்துவமனை அல்லது மாவட்ட தலைமை மருத்துவமனையில் மட்டுமே நாம் உருவாக்கமுடியும். ஏனென்றால், அதற்கு trauma care என்று சொல்லக்கூடிய விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவிலே neuro, ortho, மற்றும் anaesthesia போன்ற பல்வேறு உயர் மருத்துவத் துறையைச் சேர்ந்த மருத்துவர்களே அந்தப் பிரிவுகளில் பணியாற்ற முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற தலைக்காயப் பிரிவினை ராஜபாளையம், வட்ட மருத்துவமனையில் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]